திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு.பெ.இரவிச்சந்திரன், எம்.எஸ்.சி., எம்.ஏ., எம்.எட்.,

மூ.மு.எண்.00201/அ1/2025, நாள். 24.01.2025

| | |
|---|---|
| பொருள்: | பள்ளிக்கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி கல்வி மாவட்டம், எளாவூர், அரசு மேல்நிலைப்பள்ளி இளநிலை உதவியாளர் செல்வி.D.ஜெனிஷா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக. |
| பார்வை: | 1.அரசாணை எண்.101 பள்ளிக்கல்வி (வரவு செலவு), நாள்.18.05.2018<br>2. அரசாணை எண்.151, பள்ளிக்கல்வி SE 1(1), துறை நாள்.09.09.2022<br>3.சென்னை.3, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு செயலாளரின் கடிதம் எண் 1975/PSD-C2/2023, நாள் 25.08.2023.<br>4.சென்னை.6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 56703/அ4/இ1/2023, நாள் 21.09.2023.<br>5.திருவள்ளூர், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண்.05930/அ1/2023, நாள்.27.09.2023.<br>6.பொன்னேரி, மாவட்டக்கல்வி அலுவலரின்(இநிக) கடித ந.க.எண்.3837/அ1/2024. நாள்.27.12.2024 |

--------

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி கல்வி மாவட்டம், எளாவூர், அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் செல்வி.D.ஜெனிஷா என்பார் பார்வை 3ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வை 4ல் காணும் செயல்முறைகளின்படி திருவள்ளூர் மாவட்டம், பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 5-இல் காணும் செயல்முறைகளின்படி, எளாவூர், அரசு மேல்நிலைப்பள்ளியில் 29.09.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்துள்ளார்.

மேற்காண் பணியாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV நேரடி நியமனம் செய்யப்பட்டதாலும், கல்விச் சான்றுகளின் உண்மைத்தன்மை அறியப்பட்டுள்ளதாலும், பார்வை 6-இல் காணும் பொன்னேரி மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதத்தின்படி மேற்காண் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரி கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சார்ந்த பணியாளருக்கு தற்போது அரசாணை எண்.101 பள்ளிக் கல்வி (வரவு செலவு), நாள்.18.05.2018-ன்படி முதன்மைக் கல்வி அலுவலருக்கு நியமன அலுவலராக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலும், கீழ்க்காணும் பணியாளருக்கு மூன்றாண்டு பணிக்காலத்தில்

இரண்டாண்டிற்குள் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும் எனத் தெரிவித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 31(4)ல் தெரிவித்துள்ளவாறு தகுதிகாண் பருவகாலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறைநூல் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் செல்வி.D.ஜெனிஷா என்பாருக்கு 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாகிறது.

| வ. எண் | பெயர்/பதவி/பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | செல்வி.D.ஜெனிஷா, இளநிலை உதவியாளர்,<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>எணாவூர், | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

நிபந்தனைகள்:

1. மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டிற்குள் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும்.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள்(பணி நிபந்தனைகள்) சட்டம் 2016பிரிவு 31(4)ல் தெரிவித்துள்ளவாறு தகுதிகாண்பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும்
3. தகுதிகாண்பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படை பயிற்சி முடித்திருக்க வேண்டும்.
4. தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

மேற்காண் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து மேற்காண் பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பிவைக்குமாறு சார்ந்த அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு: பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்
திருவள்ளூர்

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர் (சார்ந்த அலுவலர் வழியாக )
நகல்
1. சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் , பொன்னேரி (இடைநிலை),
2. தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, எளாவூர்.
3. கோப்புக்கு